www.freetnbooks.com

V6S

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - டிசம்பர் 2025

-----

# வகுப்பு 6

காலஅளவு: 2.00 மணிநேரம் **அறிவியல்** மதிப்பெண்கள்: 60

## I. சரியான விடையைத் தேர்வு செய்க 5×1=5

1) ஒரு பொருளை வெப்பப்படுத்தும் பொழுது, அதிலுள்ள மூலக்கூறுகள் ............

அ) வேகமாக நகரத் தொடங்கும் ஆ) ஆற்றலை இழக்கும்

இ) கடினமாக மாறும் ஈ) லேசாக மாறும்

2) கீழ்க்கண்டவற்றுள் எது நற்கடத்தி?

அ) வெள்ளி ஆ) மரம் இ) அழிப்பான் ஈ) நெகிழி

3) காற்றில் ஹைட்ரஜனின் சதவீதம் ..........

அ) 78% ஆ) 21% இ) 0.03% ஈ) 1%

4) யூகேரியோட்டின் கட்டுப்பாட்டு மையம் எனப்படுவது

அ) செல்சுவர் ஆ) நியூக்ளியஸ் இ) நுண்குமிழ்கள் ஈ) பசுங்கணிகம்

5) மனிதனின் முதன்மையான சுவாச உறுப்பு ........

அ) இரைப்பை ஆ) மண்ணீரல் இ) இதயம் ஈ) நுரையீரல்கள்

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக 5×1=5

6) வெப்பநிலையின் S.I. அலகு ...........

7) ............ என்பது மின்சுற்றை திறக்க அல்லது மூட உதவும் சாதனமாகும்

8) ஒளிச்சேர்க்கையின் பொழுது வெளிவரும் வாயு ................ ஆகும்.

9) நான் செல்லின் உணவு உற்பத்தியை மேற்கொள்கிறேன். நான் யார்?

10) மனித மூளையைப் பாதுகாக்கும் எலும்புச் சட்டகத்தின் பெயர் ...................... ஆகும்

## III. சரியா? தவறா? தவறெனில் தவறை திருத்தி எழுதுக 5×1=5

11) துணை மின்கலன்களை ஒரு முறை மட்டுமே பயன்படுத்த முடியும்.

12) குழந்தைகளுக்கு பற்கள் முளைப்பது மெதுவான மாற்றம்

13) புவி வெப்பமயமாதலை மரங்களை நடுவதன் மூலம் குறைக்கலாம்

14) தாவரத்திலும், விலங்கிலும் உள்ள நுண்ணுறுப்புகள் செல்களால் ஆனவை

15) மூளை, தண்டுவடம் மற்றும் நரம்புகள் சேர்ந்ததே நரம்பு மண்டலம் ஆகும்.

## IV. ஒப்புமையின் அடிப்படையில் நிரப்புக 5×1=5

16) வெப்பம் : ஜூல் : : வெப்பநிலை : ................

17) குளுக்கோஸ் கரைதல் : மீள் மாற்றம் : : உணவு செரித்தல் : ............. மாற்றம்

18) ஒளிச்சேர்க்கை : .......... சுவாசம் : : ஆக்சிஜன்

19) ஸ்பைரோகைரா : தாவரசெல் : : அமீபா : ........

20) நுரையீரல் : சுவாச மண்டலம் : : ............ : இரத்த ஓட்ட மண்டலம்

## V. பொருத்துக 5×1=5

| | |
|---|---|
| 21) அ) கொதி நீர் | - இதயத்தசை |
| ஆ) கார்பன் - டை - ஆக்ஸைடு | - உள்ளீட்டுக் கருவி |
| இ) ஆற்றல் உற்பத்தியாளர் | - ஒளிச்சேர்க்கை |
| ஈ) இதயம் | - 100°C |
| உ) விசைப்பலகை | - மைட்டோகாண்ட்ரியா |

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



**VI. சுருக்கமாக விடையளி. (ஏதேனும் 10 வினாக்களுக்கு மட்டும்)** **10×2=20**

22) வீட்டில் எந்தெந்த மின்சார சாதனங்களிலிருந்து நாம் வெப்பத்தைப் பெறுகிறோம் எனப் பட்டியலிடுக.

23) வெப்பநிலை என்றால் என்ன?

24) தொடரிணைப்பு ஒன்றிற்கு மின்சுற்று படம் வரையவும்?

25) டார்ச் விளக்கில் எவ்வகையான மின்சுற்று பயன்படுத்தப்படுகிறது?


26) தாவரங்கள் மட்குதல் என்ன வகையான மாற்றம்

27) கரைசல் என்றால் என்ன?

28) வளிமண்டலம் என்றால் என்ன? வளிமண்டலத்தில் உள்ள ஐந்து அடுக்குகளின் பெயர்களை தருக

29) யூகேரியோட்டிக் செல்லிற்கு மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.

30) பின்வரும் தாவர செல்லின் ஏதேனும் நான்கு பாகங்களைக் குறி




31) அளவின் அடிப்படையில் சரியான முறையில் வரிசைப்படுத்துக.

i) யானை, பசு, பாக்டீரியா, மாமரம், ரோஜாச்செடி

ii) கோழி முட்டை, நெருப்புக் கோழி முட்டை, பூச்சிகளின் முட்டை

32) மூவகையான இரத்தக் குழாய்களின் பெயர்களை எழுதுக

33) முக்கியமான ஐந்து உணர் உறுப்புகளின் பெயர்களை எழுதுக

34) கீழுள்ளவற்றை முறைப்படுத்தி எழுதுக

i) இரைப்பை → பெருங்குடல் → உணவுக்குடல் → தொண்டை → வாய் → சிறுகுடல் → மலக்குடல் → மலவாய்

ii) சிறுநீர்ப் புறவழி → சிறுநீர்நாளம் → சிறுநீர்ப்பை → சிறுநீரகம்

35) கணினியின் கூறுகள் யாவை?

**VII. விரிவான விடையளி.** **3×5=15**

36) மின்மூலங்கள் என்றால் என்ன? இந்தியாவில் உள்ள பல்வேறு மின்நிலையங்கள் பற்றி விளக்குக.

37) உன்னைச் சுற்றி நடக்கும் மாற்றங்களிலிருந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மாற்றத்திற்கும் தகுந்த எடுத்துக்காட்டு தருக

அ) மெதுவான / வேகமான மாற்றம்

ஆ) மீள் / மீளா மாற்றம்

இ) இயற்பியல் / வேதியியல் மாற்றம்

ஈ) இயற்கையான / செயற்கையான அல்லது மனிதனால் நிகழ்த்தப்பட்ட மாற்றம்

உ) விரும்பத்தக்க /விரும்பத்தகாத மாற்றம்

38) பூமியில் உயிரினங்கள் வாழ வளிமண்டலம் ஏன் தேவைப்படுகிறது?

39) புரோகேரியாட்டிக் செல்லின் படம் வரைந்து பாகங்களைக் குறி?

40) மனித எலும்பு மண்டலத்தின் பணிகளை எழுதுக.

- - - - -

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner